# ஆண்கள் ஐக்கிய ஞாயிறு
# - 19.06.2011
# வேதவினா - நியாயாதிபதிகளின் புத்தகம்

**I. <u>கோடிட்ட இடத்தை நிரப்புக</u> {**ஏதாவது பத்து (10)} :- (10)

1. சிம்சோன் பெலிஸ்தரின் நாட்களில் இஸ்ரவேலை ___________ வருஷம் நியாயம் விசாரித்தான்.

2. மீகா தன் தாயை நோக்கி உன்னிடத்திலிருந்த __________ வெள்ளிகாசு களவு போயிற்றே. அதைக்குறித்து என் காதுகள் கேட்க சாபமிட்டாயே.

3. சேனாதிபதியாகிய சிசெராவுக்கு ___________ இரும்பு ரதங்கள் இருந்தது.

4. கீலேயாத்தியனாகிய யாவீருக்கு __________ கழுதைக்குட்டிகளில் மேல் ஏறும் _________ குமாரர் இருந்தார்கள். அவர்களுக்கு _________ ஊர்களும் இருந்தது. (ஒரே பதில்)

5. தங்கள் கையால் அள்ளி தங்கள் வாய் கொடுத்து நக்கி கொண்டவர்கள் லக்கம் __________ பேர்.

6. தேசத்தை உளவு பார்த்து வரும்படி, தங்கள் கோத்திரத்திலே பலத்த மனுஷராகிய _________ பேரைத் தங்கள் எல்லைகளில் இருக்கிற சேராவிலும் எஸ்தாவேலுமிருந்து அனுப்பி...

7. யூதா கானானியரையும் பெரிசியரையும் பேசேக்கிலே ____________ பேரை வெட்டினார்கள்

8. கிதியோனுக்கு அனேகம் ஸ்திரிகள் இருந்தர்கள். அவனுடைய கர்ப்பப்பிறப்பான குமாரர் ________பேர்.

9. _________ பேர் திருப்பிக் கொண்டு ஓடி, வனாந்திரத்திலிருக்கிற ரிம்மோன் கன்மலைக்குப் போய் ரிம்மோன் கன்மலையிலே நாலு மாதம் இருந்தார்கள்.

10. நூனின் குமாரனாகிய யோசுவா என்னும் கர்த்தரின் ஊழியக்காரன் ____________ வயதுள்ளவனாய் மரணமடைந்தான்.

11. கிதியோன் கேட்டு வாங்கின பொன் கடுக்கன்களின் நிறை ___________ பொன் சேக்கலின் நிறையாயிருந்தது.

12. இஸ்ரவேலிலே பட்டயம் உருவுகிற மனுஷர் __________ லட்சம் பேர் என்று தொகையிடப்பட்டது.

13. பெலிஸ்தரின் அதிபதிகள் சிம்சோனின் பலம் எதினாலே உண்டாயிருக்கிறதென்று அறிந்து கொள்ள தெலிலாளுக்கு ஒவ்வொருவரும் _________ வெள்ளிக்காசு கொடுப்போம் என்றார்கள்

14. சீகேமிலிருக்கிற மனுஷர் பாகால் பேரீத்தின் கோவிலிலிருந்து ___________ வெள்ளிக்காசை எடுத்து அபிமெலேக்குக்கு கொடுத்தார்கள்.

15. சிம்சோன் _______________ நரிகளைப் பிடித்து, பந்தங்களை எடுத்து, பந்தங்களை கொளுத்தி பெலிஸ்தரின் வெள்ளாமையை சுட்டெரித்துப் போட்டான்.

II. <u>யார் யாரிடம் எப்போது கூறியது</u>:- {ஏதாவது பத்து (10)} (30)

1. பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார்/ உனக்கு இருக்கிற இந்த பலத்தோடே போ, நீ இஸ்ரவேலை மீதியானரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பாய்.

2. கர்த்தாவே உம்மை பகைகிற யாவரும் இப்படியே அழியக்கடவர்கள். அவரில் அன்பு கூறுகிறவர்களோ வல்லமையோடே உதிக்கிற சூரியனைப் போல இருக்கக்கடவர்கள்.

3. நீ ஒரே ஒருவன் வீட்டுக்கு ஆசாரியனாயிருக்கிறது நல்லதோ ? இஸ்ரவேலின் ஒரு கோத்திரத்திற்கும் வம்சத்திற்க்கும் ஆசாரியனாயிருக்கிறது நல்லதோ?

4. என்னை மிகவும் மனமடியவும் கலங்கவும் பண்ணுகிறாய், நான் கர்த்தரை நோக்கி என் வாயைத் திறந்து சொல்லி விட்டேன். அதை நான் மாற்றக்கூடாது

5. ராஜாவே உம்மிடத்தில் சொல்லவேண்டிய இரகசியமான ஒரு வார்த்தை உண்டு.

6. நான் எப்படி செய்தேனோ அப்படியே தேவன் எனக்கும் செய்து சரிகட்டினார்

7. கர்த்தாவே இன்று இஸ்ரவேலில் ஒரு கோத்திரம் குறைந்து போகத்தக்கதாக இஸ்ரவேலில் இந்தக் காரியம் நேரிட்டது என்ன என்றார்கள்.

8. நீர் சொன்ன காரியம் நிறைவேறும்போது நாங்கள் உம்மை கனம்பன்னும்படி உம்முடைய நாமம் என்ன.

9. உள்ளே வாரும் என் ஆண்டவனே, என்னண்டை உள்ளே வாரும் பயப்படாதேயும்.

10. நீங்கள் போய் உங்களுக்காக தெரிந்து கொண்ட தேவர்களை நோக்கி முறையிடுங்கள். அவைகள் உங்கள் ஆபத்தின் காலத்தில் உங்களை இரட்சிக்கட்டும்

11. உமது அடியேன் கையினால் இந்த பெரிய இரட்சிப்பைக் கட்டளையிட்டிருக்க, இப்பொழுது நான் தாகத்தினால் செத்து விருத்தசேதனம் இல்லாதவர்கள் கையிலே விழவேண்டுமா.

12. நான் உங்களை ஆளமாட்டேன். என் குமாரனும் உங்களை ஆளமாட்டான். கர்த்தரே உங்களை ஆளுவாரக.

13. எனக்கு ஒரு ஆசீர்வாதம் தரவேண்டும். வறச்சியான நிலத்தை எனக்குத்தந்தீர் நீர்பாய்ச்சலான நிலங்களையும் எனக்குத் தரவேண்டும்

14. என் மகனே நீ கர்த்தரால் ஆசிர்வதிக்கப்படுவாய்.

15. நான் என்ன செய்கிறேன் என்று பார்க்கிறீர்களே, நீங்களும் தீவிரமாய் என்னைப்போல செய்யுங்கள்

III **நியாயாதிபதிகளின் புத்தகத்திலே இஸ்ரவேலின் எல்லா கோத்திரத்தின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த கோத்திரத்தின் பெயர்களை கீழே கொடுக்கப்பட்ட குறிப்புகளை வைத்து எழுதுக அல்லது உங்களுக்கு தெரிந்த குறிப்புகளோடு எழுதுக {**ஏதாவது பத்து (10)}

(20)

1. ____________கானானியரை எதிர்த்து யுத்தம் பண்ணும்படி முதல் முதல் எழுந்து புறப்பட்ட கோத்திரம். அதோடு சுதந்தர பங்கு வீதத்தில் எழுந்து சென்ற கோத்திரம் ______________

2. யூதாவிலுள்ள் பெத்லகோம் ஊரானும் ________________யனுமான ஒரு வாலிபன் அங்கே தங்கியிருந்தான்.

3. ___________________ பிரபுக்களும் தெபோராளோடே இருந்தார்கள்.

4. _______________ வம்சத்தானாகிய சோரா ஊரானாகிய ஒரு மனுஷன் இருந்தான் அவன் பேர் மனோவா.

5. _____________________ , _______________________ போர்க்களத்து முனையிலே தங்கள் உயிரை எண்ணாமல் மரணத்துக்குமுன்னே துணிந்து நின்றார்கள்.

6. _____________________ மனுஷர் கிதியோனை நோக்கி நீ மீதியானரிடம் யுத்தம்பண்ணப் போகிறபோது எங்களை அழைப்பிக்கவில்லையே.

7. மந்தைகளின் சத்தத்தை கோட்க நீ தொழுவங்களில் நடுவே இருந்து விட்டதென்ன _____________________ பிரிவினைகளால் மனோவிசாரங்கள் மிகுதி.

8. ________________ மனுஷர் கடற்கரையிலே தங்கி தங்கள் குடாக்களில் தாபரித்தார்கள்.

9. ___________________ குடும்பத்தாரும் பெத்தேலுக்கு விரோதமாய் போனார்கள். கர்த்தர் அவர்களோடே கூட இருந்தார்.

10. நம்மில் ஒருவனும் தன் குமாரத்தியை _____________யருக்கு விவாகம் பண்ணிக் கொடுப்பதில்லை என்று ஆணையிட்டிருந்தார்கள்

11. என் ஆண்டவரே நான் இஸ்ரவேலை எதினாலே இரட்சிப்பேன். இதோ ______________ ல் என் குடும்பம் மிகவும் எளியது

IV. **நான் யார் - கீழே கொடுக்கப்பட்ட குறிப்புகளில் இருந்து கண்டுபிடியுங்களேன்** (10)

1. யெருபாகாலின் இளையகுமாரன், ஒளிந்தபடியினால் தப்பினவன்.

2. பேரிச்சமரத்தின் கீழே குடியிருந்தவள், இஸ்ரவேலை நியாயம் விசாரித்த தீர்க்கதரிசி.

3. அம்மோன் புத்திரரை முறிய அடித்தவன், கீலேயாத்தியன், பராக்கிரமசாலி

4. எப்பிராயீம் மலை தேசத்தான், சுவாமிக்கு அறை வீட்டை நியமித்தவன்

5. தாற்றுக் கோலால் 600 பேரை முறிய அடித்தவன், ஆனாத்தின் குமாரன்.

6. கூடார ஆணியினால், ஒரு ஸ்திரியின் மூலம் கொல்லப்பட்டவன்.

7. இவன் தலையின் மேல் ஒரு ஸ்திரி எந்திரகல்லின் துண்டை போட்டதினால் மண்டை உடைந்தது.

8. இடதுகை பழக்கமுடையவன். மோவாபின் இராஜாவைக் கொன்றவன்

9. பலவானனாய் செயல் பட்டவன், ஸ்திரிகளினால் வீழ்ந்தவன்

10. மயிருள்ள தோலினால் தேவனை சோதித்தவன், இஸ்ரவேலை இரட்சித்தவன்

V. **கர்த்தருடைய ஆவி இறங்கினதினால் / பலமாய் இறங்கினதினால் சிம்சோன் செய்த காரியங்கள் மூன்றை எழுதுக.** (10)

1.

2.

3.

VI நியாயாதிபதிகளின் புத்தகத்திலே **அ) கர்த்தர் செய்த அற்புதமான செயல்கள் ஏதாவது 5 (ஐந்து) காரியங்களையும் ஆ) தன் பார்வைக்கு சரிபோனபடி மனிதர்கள் செய்த ஏதாவது 5 (ஐந்து) காரியங்களையும் எழுதுக.**

(20)

**கர்த்தர் செய்த அற்புதமான செயல்கள்:**

1

2

3

4

5

**b) தன் பார்வைக்கு சரிபோனபடி மனிதர்கள் செய்த காரியங்கள்**

1.

2.

3

4

5